275

அற்புத விகடன்

அல்லது

வஞ்சகநாதனும் :: :: லெஞ்சப்பிரியனும்.

திருவண்ணுவநல்லூர்,
S. M. வேலாயுதம்பிள்ளை எழுதியது.

கோவில்பட்டி,
M. A. சிதம்பரம்பிள்ளையால் வெளியிடப்பட்டது

1928

] [விலை அணு 1.

O-2MVPI,A.
N28
148364

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

இதுவரை வெளியாகாததும், நீடித்த நாட்களாய்
அநேகர் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுமாகிய

பாஞ்சாலங்குரிச்சி (சண்டை)
சரித்திரம்.

வெளிவந்துவிட்டது!!!

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாஞ்சாலங்குரிச்சிப்
பாளையப்பட்டை 129 வருஷங்களுக்கு முன் அரசாண்ட

"கட்டபொம்மு", "ஊமைத்துரை"

அவர்கள் அரண்மனையில் வேலைபார்த்த தானாவதி

"சுப்பிரமணிய பிள்ளை"

ஆகியவர்களைப்பற்றிய,
இப்புத்தகத்திலடங்கிய விஷயங்களாவன:—

(1) திருநெல்வேலி ஜில்லாவின் அதிபூர்வ ஸ்திதி. (2) பாண்டியநாடு. (3) நாயக்கர் வம்சம். (4) நவாபுகள். (5) பிரிட்டிஷ். (6) பாஞ்சாலங்குரிச்சியார் ஆதிஉறைவிடம். (7) புறப்பட்டதற்குக்காரணம். (8) சக்கம்மாள் தேவியும் ஆற்றைக் கடத்தலும் (9) ஒட்டப்பிடாரப்—சாலிகுளம். (10) அழகிய வீரபாண்டியபுரம். (11) வீரமல்லு, கெட்டிபொம்மு கோட்டை. (12) அருங்குளம் பாஞ்சாலங்குரிச்சிக்குச்சேர்ந்தவிதம். (13) கெட்டிபொம்மு நாயக்கர். (14) கோட்டையின் விஸ்தரிப்பு, கோட்டையின் தோற்றம். (15) இக்கோட்டைக்கும் மற்றக் கோட்டைகளுக்குமுள்ள வித்தியாசம். (16) கிளிக்கூட்டு அலங்கம், (17) ஆவரங்காடு. (18) தெப்பங்கள். (19) தேவாலயங்கள். (20) குளங்கள். (21) கோட்டைக்குள்ளிருந்த கட்டடங்கள் கட்டப்பட்ட விதம். (22) அரசு நிலைமை (23) மகமதலியும் கர்னல் ஹெரானும். (24) நெக்கட்டஞ்செவல் பூலுத்தேவர். (25) தேச நிலைமை. (26) காவல் ஏற்பாடுகள். (27) திசை காவல். (28) கோட்டைமேல் படை

(கடைசிப்பக்கம் பார்க்க.)

பெழுச்சி. (29) மேஜர் பிளிண்டு. (30) கர்னல் புல்லார்ட்டன். (31) ரெவினியூ போர்ட் ஸ்தாபகப், பாளையக்காரக் கலெக்டர் நியமுகமும், ஷெட்டில்மெண்டு ஏற்பாடும். (32) திருநெல்வேலிக்கு முதல் கலெக்டர். (33) கட்டபொம்மு நாயக்கரும் இராமநாதபுரமும். (34) கலெக்டர் கடிதங்கள். (35) கலெக்டரிடமிருந்து நாயக்கருக்குவந்த கடிதத்தின் சாராம்சம். (36) கொள்ளைகள், காளையார் கோவில். (37) அருப்புக்கோட்டை, கோபாலபுரம். (38) குரும்பூர். (39) திப்பு சுல்தான். (40) அச்சங்குளம், வண்டானம். (41) சோளபுரம். (42) கட்டபொம்மு நாயக்கரும் பானர்மன் துரையும். (43) பாஞ்சாலங்குரிச்சிக்காரர் தைர்யம். (44) தேகாப்பியாசங்கள். (45) ஆயுதங்கள். (46) தண்டனை. (47) பிரக்யாதி பெற்றவர்கள். (48) சேவத்தையா. (49) கலெக்டர் லஷிங்டன்சமனுக்கும்மறுப்பு. (50) ரெவினியு போர்டார் விளம்பரச் சுருக்கம். (51) முதல் சண்டை. (52) மேஜர் பானர்மன் துரை, தானுவதிப்பிள்ளையின் முடிவு, கட்டபொம்மு நாயக்கர் முடிவு. (53) பாஞ்சாலங்குரிச்சி உறவினரில் கைதிகள். (54) ஸ்தானுதிபதிப்பிள்ளையின் உறவினரில் கைதிகள். (55) சுமத்தப்பட்ட குற்றங்கள். (56) இரண்டாவது சண்டை. (57) பாஞ்சாலங் குரிச்சியார் பின் சந்ததி வரலாறு. (58) பொதுக்குறிப்புகள். (59) மதாச்சாரம். (60) வேட்டையாடுதல். (61) நகைகள், கற்குவியல்கள். (62) கப்பளத்து நோக்கலவர். சிதறிப்போனதின் காரணம், பாஞ்சாலங்குரிச்சி. (63) சண்டைக்காலத்தில் உத்தியோகம் பார்த்த சர்க்கார் அதிகாரிகள் பெயர்களும், சண்டை நடத்திய பட்டாளத்து அதிகாரிகளின் பெயர்களும், (64) அடக்கம்பண்ணப்பட்ட இடங்களில் எழுதப்பட்ட வாசகங்கள்.

புத்தகம் 1-க்கு விலை அணு 12. தபால் சார்ஜ் வேறு.

சரஸ்வதி அன்கோ,

கோவில்பட்டி, S. I. R.

உ

ஸ்ரீ கமல சரஸ்வதி கடாக்ஷ

அற்புத விகடன்

அல்லது

வஞ்சகநாதனும் லெஞ்சப்பிரியனும்

மனுநீதி தாவா சரிநீதி தீர்ப்பு.

அலைகடல்சூழ் உலகினில் நிகழ்ந்திடும் அற்புத, மோசங்களைத் தப்பிதமின்றி இப்புவிக் களித்திடும் அற்புத விகடனாகிய நான், உல்லாசமாய் உலாவி வரவேண்டி, திருவானைக் காவலைவிட்டுக் கால் நடையாகப் புறப்பட்டு, ஸ்ரீரெங்கம் டவுன் ரயில்வே ஸ்டேஷனையடைந்து அங்குமிங்குமுலாவியபடியே யிருந்தேன்.

மாலை $5\frac{1}{2}$-மணி ஆயிற்று. அச்சமயம் திருச்சி ஜெங்ஷனிலிருந்து ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்காக வரும் மாலை வண்டியும் ஸ்டேஷனில் வந்து நின்றது. ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு வண்டியைவிட்டுக் கீழிறங்கி வெளியே போய்க்கொண்டிருந்தனர். அச்சமயம் சில நாமதாரிகளும், சில சைவ சீலர்களும் ஒவ்வொரு வண்டியாக யாருடைய வருகையையோ எதிர்பார்ப்பது போல் கடைசி வண்டி வரையில் பார்த்து விட்டு, வாடிய முகத்துடன் திரும்பிச் சென்றார்கள். அவர்களுள் ஒரு அந்தணர் மட்டும், அங்குமிங்கு முலாவியபடியே நின்றுகொண்டிருந்தார். அவர் நெற்றியில் பட்டை பட்டையாய் விபூதி தாரணம் செய்து கொண்டும், கழுத்தில் உருத்திராக்ஷமணிகளும் தரித்துக் கொண்டு விளங்கினார். அவரை எனக்கு நன்கு தெரியும்.

சென்னை-600 008.

ஆதலால், அவருடைய மாயவலையில் பிரயாணிகளில் எவரேனும் சிக்கலாம். அவ்வற்புத விநோதத்தைக்கண்டு களிக்கலாம் எனக்கருதி, நான் அங்கு மிங்கு முலாவியபடியே, அன்னார் மீதே திருஷ்டியுடையவனாயிருந்தேன். அதே சமயம், அவ்வண்டியில் வந்திறங்கிய ஒரு குடும்பத்தார்களாகிய பதின்மரில் ஒருவர், நான் முன் கூறிய அந்தணரை அணுகி,

"ஸ்டேஷனுக்கும் பெருமாள் கோவிலுக்கும் எவ்வளவு தூரமிருக்கும்" என்ற அளவில் அந்தணரின் முகம் ஆனந்த பரவசத்திலாழ்ந்து விட்டது.

அந்தணர். 1மைல் தூரம்தான் இருக்கும் வாடகைக்கு வண்டியும் கிடைக்கும். தாங்கள் எந்த ஊர்? தங்கள் நாமதேயமென்ன? என்றார்.

பிரயாணி. நாங்கள் சிங்கப்பூர் வாசிகள். எனது பெயர் தேசிகநாதன்.

அந்தணர். ஓஹோ! சிங்கப்பூர் வாசிகளா! சிங்கப்பூரில் கா.ம. சோ. ப. தன்னம்பலம் செட்டியாரவர்களைத் தெரியுமா?

பிரயாணி. ஆஹா! நன்றாகத் தெரியும். அவர்கள் லேவாதேவிக் கடைக்கு அடுத்த கடை நம்முடையதுதான்;

அந்தணர். ரொம்பவும் சந்தோஷம்! அவர்கள் நமக்கு ரொம்பவும் வேண்டியவாள்; நல்ல மனுஷ்யர்; தர்ம சிந்தனையுள்ளவர்; பிராமண விஸ்வாசி; சென்றமாதத்தில்கூட இங்கு தெரிசனார்த்தம் வந்திருந்தார்; நமது வீட்டில்தான் தங்கியிருந்தார். நானே கூடயிருந்து சௌகரியமாக தெரிசனம்

முதலானதுகள் செய்து வைத்து ஊருக்கனுப்பினேன். போகும்போதுகூட நான் எவ்வளவு மறுத்தும் கேளாதபடி 200 ரூ வெகுமதி யளித்தார்.

பிரயாணி. ஓஹோ! அப்படியா! நிரம்ப சந்தோஷம். தேடிய மூலிகை காலிற் சிக்கியது போலாயிற்று. நாங்களும் இவ்வூருக்குப் புதிது. நான் அவரிடமிருந்து திருவானைக் காவலிலிருக்கும் பஞ்சனதய்யருக்கு சிபார்சுக் கடிதமும் கொண்டு வந்திருக்கிறேன். அவரைத் தாங்களறிவீர்களோ?

அந்தணர். அப்படியா சமாசாரம்! அவாள் உங்களுக்கு சிபார்சுக் கடிதமும் கொடுத்திருக்கிறார்களா! நான்தான் பஞ்சனதய்யர். அப்படியானால் புறப்படுங்கள். அஸ்தமனத்திற்குள் திருவானைக்காவலிற்குப் போய்விடலாம்.

பிரயாணி. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலாயிற்று. வாடகை வண்டி ஒன்றமர்த்திக் கொள்ளலாமன்றோ?

அந்தணர். வேண்டுவதில்லை. ஒருபர்லாங்கு தூரம் தான். நாம் கால் நடையாகவே சென்றுவிடலாம். என்றவுடன், அப்பிரயாணிகள் தங்கள் பெண்டுபிள்ளைகளுடனும் மூட்டைகளுடனும் அந்தணரைத் தொடர்ந்து சென்றார்கள். இவ்வளவையும் உற்று நோக்கிக் கொண்டிருந்த அற்புதவிகடனாகிய நான், அவ்வந்தணரைப் பற்றி சிறிதளவு கூறிவிட்டு நமது கதையைத் தொடங்குகின்றேன். அன்னவரை "வஞ்சகநாத பஞ்சாபிகேசய்யர்" என, அவ்வூர் வாசிகள் அழைப்பது வழக்கம். அவர், அவ்வூரில் விளங்கும் பஞ்ச ஸ்தலங்களில் ஞான க்ஷேத்திரம் எனக் காரணப்பெயர் பூண்ட,

6-2 MVP 1/1 1123

"ஸ்ரீஜெம்புகேஸ்வரம்" ஆலயபேஷ்கார் உத்தியோகம் வகிப்பவர். நயவஞ்சக சிரேஷ்டர். பணமொன்று கிடைப்பதாயின் எவ்வளவு கொடிய காரியங்களை ஆயினும் செய்து முடிக்கும் ஆற்ற லுள்ளவர். பிரயாணிகளை வஞ்சித்துப் பொருள் பறிப்பதில் சமத்கார சிரேஷ்டர். இவருக்கு ஒரு சிஷ்யருண்டு. அன்னவரின் நாமம் லெஞ்சப்பிரிய கஞ்சமலைப்பிள்ளை, அவரும் அவ்வாலய உத்தியோகஸ்தர்களில் ஒருதலைமைவகிப்பவர்; இவர் லெஞ்சம் வாங்குவதில் மஹாசிரேஷ்டர்; பொதுவாய்க் கூறுமிடத்து இவ்விருவர்களும் பஞ்சமாபாதகங்களுக்கும் அஞ்சா நெஞ்சு படைத்த அருங்குணவந்தர்கள். அவ்விருவர்களுடைய குணாலயங்களும், இரக்கமற்ற செய்கைகளும் பின் வரும் விஷயங்களால் நன்கு விளங்கும். வஞ்சசனாதபஞ்சாபிகேசய்யர் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டவர் பிரயாணிகளின் தலைவரான தேசிகனாதரைப் பார்த்து,

பிள்ளைவாள் திருவானைக்காவலானது பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றானதால் ஸ்ரீ ஜெம்புனாத ஸ்வாமி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பிகையை சேவிக்கவேண்டியது ஒவ்வொரு மானிடர்களின் கடமையாகும். பொதுவாய்க் கூறுமிடத்து சிவலிங்க பூஜை செய்தவர்கள் மோக்ஷசாம்ராஜ்ய மெய்துவார்கள் என்பது நிச்சயம். அதிலும் சிவலிங்க பூஜையின் மஹத்துவம் சாமான்யமன்று அதற்கு உதாரணமாக பிரமோத்திர காண்டத்தில் கூறப்பட்டிருக்கும் கதை ஒன்றைக் கூறுகிறேன் கேளுங்கள். பூர்வம் காஷ்மீரதேசத்தை அரசாண்டு வந்த சிங்ககேது என்னும் வேந்தர் பெருமான் தனது பரிவாரங்களுடன் காட்டகத்திற்கு வேட்டையாடச் சென்றனர். ஆங்கு வேடுவர் தலைவனான நந்தகோபனென்பவன்

வழியில்கிடந்த சிவலிங்கமொன்றைக் கண்டு ஆச்சரியமுற்று அதை எடுத்துவந்து அரசனின் முன் வைத்து அது என்ன எனலும், வேந்தர் பெருமான் அது ஒரு சிவலிங்கமென்றும் அதை இடைவிடாது மனமெய்மொழிகளால் உள்ளன்பூன்றி பூஜித்தவர்கள் இம்மையில் கீர்த்திப் பிரதாபங்களையும், மறுமையில் மோக்ஷ லாபத்தையும் எய்துவார்களென்றும், அச்சிவலிங்கத்திற்கு திருமஞ்சன அபிஷேகம் செய்வித்து தூப தீப நைவேத்தியம் செய்வித்து, அன்றுடம் தகிக்கப்பட்ட மனிதர்களின் சுடலைச் சாம்பலை வைத்து மலர்கொண்டர்ஜித்து வந்தால் சாலோக சாயுஜ்யம் சித்திக்குமெனலும் அவ்வேடுவர்த் தலைவன் பரமசந்தோஷமடைந்து இல்லமடைந்தவுடன் அவ்வாறே பூஜை செய்வதெனத் தன்னுள் கருதியவனாய் சிவலிங்கத்தை இல்லமெடுத்துச் சென்று, மறுதினம் முதல் நியமம் வழுவாது வேந்தர் பெருமான் கூறியபடி உள்ளன்பூன்றிய மனத்தனாய் பூஜித்து வந்தான். இவ்வாராக ஒரு நாளேனும் தவறாது பூஜை செய்துவரும் நாளில் ஒரு நாள் அன்று தகிக்கப்பட்ட மனித உடலின் சாம்பலிற்காக பல சுடலைகளை யடைந்து தேடியும் கிடைக்கப்பெறாமையால் மெய்வருந்தியவனாய் அருணன் மேற்றிசையில் மறையும் தருவாயில் இல்லமடைந்து வாடிய முகத்துடன் அன்றைய பூஜைக்கான சுடலைச்சாம்பல் கிடைக்கப் பெறாமைக்காகக் கண்ணீர் வடித்தவனாக பூஜை முகத்தில் சிவலிங்கத்தினெதிரில் நின்று பரமதயாநிதே! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! எளியேனை சோதனைசாகரத்திலாழ்த்துவது தர்மமா! இது தருமமா! இது முறையா! இது தருமந்தானா! ஜெகதீசா! என வாய்விட்டுப் பிரலாபித்தான். பிரலாப மொழிகளைச் செவி ஏற்ற நந்தகோபனின் இல்லாள் உள்ளிருந்து பூஜாகூடத்தை

யணுகி, தனது பிராணேசரை நோக்கி, மெய்வருத்தமுற்று மெய்நொந்து நிற்பதற்குக் காரணமென்ன? என வினவவும் நந்தகோபரும் "அன்று தகிக்கப்பட்ட மனித உடலின் சாம்பல் பூஜைக்குக் கிடைக்கவில்லை" என நவின்றார். செவியேற்ற அவ்வுத்தமி "நாதா வருந்தற்க எளிதில் கிடைக்கக் கூடிய பொருளிற்காக ஏன் வருந்தவேண்டும்; தாங்கள் நெடு நாட்களாக வழுவின்றி நடத்திவந்த பூஜைக்கு இன்று விக்கினம் நேரிடுமாயின் இதுவரையில் செய்துவந்த பூஜையும் பலனற்றதாகும்; எவ்வாறேனும் இன்றைய பூஜா காரியம் வழுவின்றி நடைபெற வேண்டும்; ஆதலால் அடியாள் கருத்தைத் தெரிவிக்கிறேன். நாதா! இம்மானிட ஜென்மமானது என்றேனும் ஒருநாளில் அழிந்தொழிவது நிச்சயம்; ஆதலால் தங்கள் பூஜா காரியம் தடையின்றி நிறைவேற அக்கினி வளர்த்து அதில் நான் பிரவேசிக்கக் கருதுகிறேன்; பின்னர் அக்கினிக்கிரையாகிய என்னுடலின் சாம்பலைக் கொண்டு பூஜா காரியத்தை நிறைவேற்றுங்கள்.

இதைத்தவிர வேறு மார்க்கமில்லை. ஒன்றும் ஆலோசிக்கவேண்டாம் என, உள்ளன்பூன்றிய பதிபக்தி விசேடத்தால் மொழிந்தனள். செவியேற்ற நந்தகோபன் தனக்கு உத்தமோத்தம சிரேஷ்டையான மனைவியை அனுக்ரஹித்த பரமதயாநிதியை மனதாரத் துதித்து சந்தோஷமடைந்தவராய் அக்கினி வளர்த்துக் கொடுக்கவும் அவ்வுத்தமி அவ்வக்கினியை மும்முறை வலம்வந்து தனது பர்த்தாவையும் மும்முறை வலம் வந்து பாத கமலங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து அவ்வக்கினியில் பிரவேசித்து வெந்து சாம்பலானாள். நந்தகோபரும் அச்சாம்பலைக்கொண்டு பூஜையை வழுவின்றி

முடித்து, அவ்வானந்த நிலமையில் தனது பத்தினியாகிய பத்மினி வெந்து பட்டதை மறந்தவராய் வழக்கம்போல் பூஜை முடிந்தவுடன் தனது பத்தினியை பகவத் பிரசாதம் கொடுக்க அழைப்பதுபோல் அழைக்கவும் அவ்வுத்தமி, செந் தாமரைமலர் முகத்தளாய் எதிர்சென்று நின்று வணங்கிநிற்க வும் அவ்வமயம் சற்றுமுன் அக்கினியில் பிரவேசித்ததை நினைத்துப் போச்சரியமுற்று, திரேகபுளகிதமுற்று, பெண் பாவாய் அக்கினிவசமாகிய நீ, எவ்வாறு மீண்டும் உயிர் பெற்று வந்தாய் என வினவவும் அவ்வமயம் இருதிறத்தார் களும் திசைத்து நிற்கும் சமயம், ஸ்ரீ கருணாகரக் கடவுளும் ரிஷபவாகன ரூபராய் பிரசன்னமாகி அப்பக்த சிரோன்மணி களுக்கு காக்ஷி கொடுத்து, நந்தகோப, நின் உள்ளன்பூன்றிய பக்திக்கு மெச்சினேன். நின்மானஸ்மீகபூர்வமான பக்தியின் வன்மையும் உனக்குற்ற உத்தமோத்தமியாகிய பத்மினியின் கற்பின் மகிமையும், அவ்வுத்தமியை ஒப்ப ஒவ்வொரு பெண் மக்களும் பதி சொற்கடவாத பாவையர்களாய் விளங்கவும், உலகம் புகழவும் நலம் சோதித்தோம். இனி, நீங்கள் இப் பூவுலக வாழ்கையிலிருப்பது சரியல்ல என, திருவாய்மலர்ந் தருளிய இமைப்பொழுதில் தெய்வலோகத்திலிருந்து வந்த புஷ்ப விமானத்திலாரோகணிக்கச் செய்து தெய்வலோகம் அழைத்தேகப்பட்டுப் பிறப்பிறப்பாகிய தொல்லைகளற்று, ஜீவன்முத்தர்களானார்கள். ஆதலால் சிவலிங்க பூஜையானது சர்வ சாமான்ய பலனுடையதன்று.

ஆதலால் திருவானைக்காவலில் ஸ்ரீ ஜம்புநாத ஸ்வா மிக்கு அபிஷேக ஆராதனைகள் விசேஷமாகச் செய்வித்து லெக்ஷார்ச்சனையும், பிராம்மண சந்தர்ப்பணையும் செய்வித்தால்

இகத்தில் கீர்த்தியும், பரத்தில் முத்தியும் உண்டாகும் என, வஞ்சகநாத பஞ்சாபிகேசய்யர் தடபுடலாய் ஒருவாறு கூறி முடித்ததும் பிரயாணியாகிய தேசிகனுதம் அந்தணரை நோக்கி,

தாங்கள் கூறியவைகள் முற்றிலும் நியாயமாகத்தான் தோன்றுகிறது. ஸ்ரீ ஜம்புநாத ஸ்வாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நாங்களே செய்யலாமன்றோ?

பஞ்ச. அதற்கென இவ்வாலயத்தில் பண்டிதோத்தமர்கள் இருக்கிறார்கள் அவர்களுக்கு அபிஷேக முதல் கற்பூரார்த்தி வரையில் ஒவ்வொன்றிற்கும் தக்ஷிணைத் திட்டமுண்டு. அதன்படி கொடுத்துவிட்டால் அவர்கள் செவ்வனே செய்து பிரசாதங்களை நமக்களிப்பார்கள்.

தேசிக. சிவலிங்க பூஜை அவரவர்களே செய்தால் தான் மோக்ஷம் எனத் தாங்கள் சற்று முன் கூறிய கதையில் கூட கூறிவிட்டு தற்போது இவ்வாறாகத் தெரிவிக்கிறீர்களே.

பஞ்ச. அவரவர்களே விக்கிரகங்களைப் பூஜிப்பதென்னும் வழக்கம் இவ்வாலயத்திலில்லை. அதற்கெனப் புராதனமாக, பாரம்பரையாய் அர்ச்சகமிராஸ் பார்த்துவரும் பண்டிதர்களைத்தவிற ஏனையோர்கள் கெர்ப்ப கிரஹத்திற்குள் நுழைவதற்குக்கூட அருகராகமாட்டார்கள். அதன்படியே ஆலய முன் கோபுர வாயிலிலேயே ஷெ ஆலய தர்மகர்த்தா சுயநல சோணாசலம் செட்டியாரின் அறிக்கைப் பலகையும் தொங்க விடப்பட்டிருக்கும்.

தேசிக. ஓஹோ! அப்படியா, தர்மகர்த்தாவின் நாமம்

சுயநல சோணாசலம் செட்டியாரென்றீர்களே! அவர் தன்னலத்தையே பெரிதும் கருதுபவரோ?

பஞ்ச. அப்படியல்ல, சுயநலம் என்பது ஒரு ஊர். அவ்வூர் அவருடைய ஜென்ம தேசம். ஆதலால் சுயநல சோணாசலம் செட்டியாரெனக் காரணப்பெயருண்டாகியதே தவிற வேறொன்றுமில்லை.

தேசிக. சந்தோஷம்! அப்படியானால் சிவலிங்கத்திற்கு குறிப்பிட்ட ஒரு வகுப்பாரையன்றி ஏனையோர்கள் பூஜை செய்ய இயலாதோ?

பஞ்ச. கண்டிப்பாய் இயலாது.

தேசிக. திருவானைக்காவல் ஸ்தல புராணத்தில் அர்ச்சகர்களின் அக்கிரமம் பொறுக கடவுள் வடதிருக்காவேரியின் வடபாரிசத்திலோர் கிருமத்தில் பிராமண சந்தர்ப்பனை என்றும், பூரி தெக்ஷிணை விசேஷமாய்க் கிடைக்குமென்றும், பிராமண வடிவுடன்வந்து கூறி, காவேரியின் தென்கரையில் பரிசலிலேற்றி, நடு ஆற்றில் கவிழ்த்திவிட்டு, அவ்வக்கிரமஸ்தர்களைத் தொலைத்துவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறதே? அப்படியிருக்க, தற்போது உள்ள பண்டிதோத்தமர்கள் எங்கிருந்து புறப்பட்டார்கள். ஒருக்கால் கவிழ்ந்த படகில், தட்டுத்தடுமாறி எவரேனும் கரை சேர்ந்து உயிர் பிழைத்திருந்து அவர்களுடைய சந்ததியார்களாக இருக்கலாமோ?

பஞ்ச. பிள்ளைவாள்! நான் சுமார் 20 வருஷ காலமாக இவ்வூராலயத்தில் பேஷ்கார் உத்தியோகம் பார்த்து வருகிறேன். இக்கதையை நான் கேள்விப்பட்டதுமில்லை. இதெல்

லாம் தாங்கள் எதற்காகக் கிளறுகிறீர்கள். அதோ எனது இல்லமும் வந்துவிட்டது. ஒரு அறை காலிசெய்து கொடுக்கிறேன்; அதில் தங்களுடைய சாமான்களை வைத்துக்கொள்ளுங்கள் எனக் கூறி இல்லமடைந்தவுடன் ஒரு அறையும் காலி செய்துவிட்டார். தேசிகனுதம்பிள்ளை தனது சாமான்களை அவ்வறையில் வைத்துவிட்டுத் தன்னுடன் வந்த மற்றவர்களுடன் வெளித்திண்ணையில் அமர்ந்தார். உடனே அந்தணர் வெளிவந்து ஏன் திருமதிலுக்கு வெளிப்புறம் வெட்டவெளி. வெளியே போய் மாலைக் கடன்களை முடித்து வரலாமே என்றார். உடனே சகலர்களும் புறப்பட்டார்கள். அச்சமயம் தேசிகனுதம்பிள்ளை பஞ்சநதய்யரை நோக்கி,

தேசிக. நாளையத்தினம் காலையில் தெரிசனம் செய்ய வேண்டும். அபிஷேக அலங்கார நெய்வேத்தியங்களுக்கு நாமே ஏற்பாடு செய்துகொள்ளலாமன்றோ?

பஞ்ச. நாமே எப்படிச்செய்கிறது. அதற்கான இவ்வூர் வழக்கம்போல்தான் செய்யவேண்டும்.

தேசிக. வழக்கமென்றால் எப்படி?

பஞ்ச. ஆலய அர்ச்சகர்களிடம் தெரிவித்து இத்தனை ரூபாய்களுக்குள் சகலமும் நடக்கவேண்டுமென்று கூறி ரூபாயைக் கொடுத்துவிட்டால் யாவும் ஒழுங்காக நடக்கும்.

தேசி. அதுதானே முடியாது. நாமே அபிஷேக அலங்கார முதலானதுகள் செய்வதாயிருந்தால் சரி, இல்லாவிடில் ஒன்றும் தேவையில்லை. சாதாரணமாகச்சென்று தெரிசனம் செய்துவிட்டு வருகிறது என்றவுடன் பஞ்சநதய்யர் முகவாட்டமடைந்துவிட்டது. அவர் தேசிகநாதம்பிள்ளை

யிடம் தாராளமாகப் பொருள் பறித்துவிடலாமெனக் கருதி அதற்காகவே சிவலிங்க பூஜாமஹாத்துவம் என்னும் கதையையும் உபந்யாசம் செய்தார். கடைசியாகப் பிரயாணி கூறியதிலிருந்து அந்தணர்பாடு அதோகெதியாகியது. இதற்கென்ன செய்வதென ஆலோசனை செய்தார். ஒரு விநாடிக்குள் தன்னுள் ஏதோ ஆலோசனைசெய்துகொண்டு பிரயாணியை நோக்கி,

பஞ்ச: பிள்ளைவாள் தாங்கள் சொல்லுகிறபடி இவ்வூர் ஆலயத்தில் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் ஒரு காரியம் என்னால் செய்யக்கூடும். நான் இவ்வாலய பேஷ்காராதலால் என்னாலியன்ற அளவில் தங்களைத் திருப்திசெய்து அனுப்புகிறேன் இவ்வாலயத்தை ஒட்டினாப்போல் சற்று தூரத்தில் ராஜராஜேஸ்வரர் என ஒரு சிவலிங்க ஆலயம் உளது. அதும் இவ்வாலயத்தைச் சேர்ந்ததுதான். தாங்கள் கருதுகிறபடி அந்த ஆலயத்தில் என்றால் தாங்களே அபிஷேகம் முதலானதுகள் செய்யலாம் என்றார்.

தேசி: சந்தோஷம்! எந்த ஆலய மென்றாலென்ன? எவ்விடத்தில் நாமே நேரில் கடவுளை வணங்கவும், அபிஷேக அலங்காரங்கள் செய்யவும் அனுமதியும், ஆதிக்கமும் உண்டோ அவ்விடத்தில் நாம் நமது மனமொழி மெய்களால் கடவுளை வணங்குவோம் என்றார். செவியேற்ற வஞ்சகநாதர் சரி! எப்படியானா லென்ன; நமக்குச் சரியானபடி பொருள் கிடைக்கவேண்டும். இவனோ விடாக்கண்டனாயிருக்கிறான். ராஜ ராஜேஸ்வரர் ஆலயத்திலோ அவ்விக்கிரகம் நீர் கண்டு எவ்வளவுகாலமாகியதோ, ஆனால் பிராமணரல்லாதவர்கள் அவ்வாலயத்தின் கெர்ப்பக் கிரகத்தினுள்ளே

நுழையக்கூடாதுதான். ஆனால் ஜன சஞ்சாரமற்ற அவ்வாலயத்தில் என்ன நடந்தாலும் ஒருவருக்கும் தெரியலாகாது. ஆதலால் அவ்வாலயத்திற்கு அழைத்துப் போவதால் நமக்கும் பொருள் கிடைக்கும். அதுதான் சரி எனத் தன்னுள் கருதியவராய்ப் பிரயாணிகளையுமழைத்துக் கொண்டு இல்லமேகினர்.

அங்கு இராப் போஜனத்திற்குப் பின்னர் மறுநாள் நடைபெற வேண்டிய அபிஷேக ஆராதனைக்கான சாமான்களுக்கு ஒருமுழ நீளம் ஜாப்தா தயாரித்து மொத்தத்தில் ரூ 350க்கு ஜாப்தா கொடுத்துவிட்டதுடன், மறுதினம் காலையில் சகல சாமான்களும் சேமிக்க முடியாதென்றும், ஆதலால் இரவே, முன்னதாகவேண்டிய சாமான்களைத் தயாரிக்க வேண்டுமெனவும், பிரயாணியாகிய தேசிகனுதரும் ஜாப்தாப்படி சாமான்கள் தயாரிக்கும்படி ரூபாய்களையும் கொடுத்துவிட்டார். பரவச புளகிதரான, வஞ்சகனுத பஞ்சநதய்யர் பிரயாணிகளை சயனிக்கும்படியாகக் கூறிவிட்டு 350 ரூபாயில் 25 ரூபாய்களைமட்டும் எடுத்துக்கொண்டு, அவ்விராப்பொழுதில் ஸ்ரீ ஜம்புநாத ஸ்வாமி ஆலயத்திற்குச் சென்று, அங்கு ஆலயத்திற்குச் சொந்தமான உக்கிராண அரைக் காவலனை இரகசியமாக அழைத்து, அவனிடம் ரூ 25யும் கொடுத்து ஜாப்தாவைக் காண்பித்து, அதிலுள்ளபடி சாமான்களை இரகசியமாக ஒருவருக்கும் தெரியாதபடி ராஜ ராஜேஸ்வரர் ஆலயத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்புவிக்கும்படியாக உத்திரவிடவும், அக்காவலனும் ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு, கோவிலில் அர்த்தஜாம பூஜை ஆகியதின் பின்னர், ஜாப்தாவில் கண்டபடியுள்ள சுமார் 150 ரூ பெறு

மானமுள்ள சாமான்களை அங்கு கொண்டுபோய் ஒரு அறையில் வைத்துவிட்டான். இவை யாவையும் ஒன்று விடாது கவனித்துக்கொண்டிருந்த அற்புத விகடனாகிய நான் மனந்தாளாது, இவ்வக்கிராமஸ்தர்களைச் சந்தி சிரிக்கச் செய்யவேண்டுமெனக் கருதி அவ்விடம் விட்டகன்று, இல்லமடைந்து இராப் போஜனத்திற்குப் பின்னர், அவ்வாலய தலைமை குமாஸ்தாவும் படுமோசக்கார உருத்திராக்ஷப் பூனையுமாகிய லெஞ்சப்பிரிய கஞ்சமலைப் பிள்ளையின் இல்லமடைந்தேன். அங்கு அவர் யாருடனோ இரகசியமாகக் குசுகுசுவென சம்பாஷிக்கும் சப்தம் கேட்கவும், பூனை நகர்வது போல் நகர்ந்து அவ்வறையின் ஜன்னலினேரமாய்ச்சென்று நின்றேன். அப்போது அவர் அங்கிருந்த மற்றவனை நோக்கி

அம்மன் கோவில் பாராக்காரனெல்லாம் நித்திரையிலிருப்பார்கள். நீ நிதானமாகச் சென்று வண்டியை ரஸ்தாவிலேயே நிறுத்திவிட்டு, கொட்டாரத்தைத்திறந்து 4 மூட்டை நெல் கொண்டுவந்து விடு. என ஒரு சாவியை அவன் வசமளித்தார். முற்றிலும் செவியேற்றிருந்த நான் அம்மனிதன் சென்றவுடன், கஞ்சமலைப் பிள்ளையை அழைத்தேன். உடனே அவர் வெளி வந்தார். அவருக்கு என்னைக் கண்டால் சற்று அச்சமே. ஏனெனில், நான் அவ்வூர் கிராம அதிகாரி. ஆதலால் அவர் என்னைக் கண்டவுடன் தடபுடலாக மரியாதை செய்து உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே சென்றதும், மறுநாள் ராஜராஜேஸ்வரர் ஆலயத்தில் இரகசியமாய் பிராமணரல்லாதாரைக் கொண்டு நடைபெறயிருக்கும், அபிஷேக ஆராதனையின் விபரத்தைக் கூறவும், அவர் தனக்கு வருமானமின்றி பேஷ்கார் தனித்துச்செய்யக் கருதியிருக்கும், படுமோசத்தைப் பகிரங்கப்படுத்தி அவமா

னப்படுத்திவிடுவதுடன் மேல் நடவடிக்கையும் தொடர்ந்து விடுவதாகக் கூறினர். நான் அம்மட்டில் அவ்விடம் விட்டு வெளிவந்தேன். அச்சமயம் அவ்வழியாகச்சென்ற தாணுக் காரனெருவனை அழைத்து, அம்மன் கோவிலினெதிரிலுள்ள கொட்டாரத்தில் நடைபெற யிருக்கும் களவை எடுத்துக் கூறி, மறைவிருந்து பிடித்துவிடும்படியாகக் கூறிவிட்டு, ஆலய வழியாகவே இல்லத்தை நோக்கிச் செல்லுகையில் அந்தணர் ஒருவர் சிறு மூட்டையைத் தனது உடையினி டையே மறைத்துக்கொண்டு செல்வதைக்கண்டு அவரை நோக்கி,

அற்பு. ஐயரே! அதென்ன மூட்டை?

ஐயர். என்ன மூட்டையானுலுமக்கென்ன.

அற்பு. ஓஹோ அப்படியா? நான் யாரெனத் தெரியு மல்லவா?

ஐயர். ஓஹோ! தாங்களா? தெரியாமல் கூறிவிட்டேன் மன்னிக்க வேண்டும்.

அற்பு. சரி: சரி, அதென்ன மூட்டை.

ஐயர். அர்த்தஜாமத்திற்கு நெய்வேத்தியமான சொக் கரப்பம், வடை முதலிய பிரசாதங்கள்.

அற்பு. எங்கே கொண்டுபோகிறீர்?

ஐயர். இவ்வாலய தர்மகர்த்தாவின் வீட்டிற்கு.

அற்பு. அவர் அதற்கு கிரயம் கொடுத்துவிட்டாரா?

ஐயர். தர்மகர்த்தாவிற்கு கிரயம் கிடையாது.

அற்பு. பின்னர் அப்பிரசாதங்களுக்கு சிலவு விபரம் எப்படிக் கணக்கெழுதுவது?

-600 008.
168364

ஐயர். தேசாந்திரிகளுக்கு தர்மவினியோகம் எனக் கணக்கெழுதுவது.

அற்பு. ஓஹோ! அப்படியா? இதில் எவ்வளவு பிரசாதமிருக்கிறது?

ஐயர். இதில் 4 அப்பங்களும் 2 வடைகளுமிருக்கிறது.

அற்பு. அவைகளின் மொத்தக் கிரயமென்ன?

ஐயர். முக்கால் ரூபாய்.

அற்பு: அதன் கிரயத்தை நான் கொடுக்கிறேன். என்னிடம் கொடுத்துவிடும்.

ஐயர். மானேஜர் கோபித்துக் கொள்வதுடன் அபராதமும் விதிப்பார்.

அற்பு. நீர் மரியாதையாகக் கொடுத்துவிடும். இல்லையேல் உம்மை இலேசில் விடேன். உம்மை அபராதம் முதலான தெண்டனைக்குட்படுத்தினால் உடனே எனக்கு ஒரு மனுக்கொடும். நான் விசாரணைசெய்து உமக்கு நியாயம் கூறுகிறேன். என்றவுடன் அவரும் பிரசாதங்களைக் கொடுத்து விட்டு அதன் விலையைப் பெற்றுக் கொண்டு, மானேஜராகிய சுயநல சோணாசலஞ் செட்டியாரிடம் சென்று, நடந்தபடி கூறியதில் அவர் கடுஞ் சினங்கொண்டு, "அவனுக்கு உம்மை யார்ஒய் கொடுக்கச் சொன்னார்கள் உம்மை ஒரு மாசத்திற்கு சஸ்பண்டு செய்திருப்பதுடன் 5 ரூபாய் அபராதமும் செலுத்த வேண்டும்" என கர்ணகடூரமான உத்திரவிட்டார். அவ்வந்தணர், தனது கஷ்ட காலத்திற்கு மனம் வருந்தியவராய் இல்லமடைந்தனரே யாயினும் மறுதினமே கிருமமுன்சீப்பிடம் பிராது செய்வதாக முடிவு செய்துகொண்டார்.

நேயர்காள், ஆலய சிப்பந்திகளின் அட்டூழியங்களையும், அதிகார வர்க்கத்தார்களின் கவனக் குறைவுகளையும்,

படுமோசங்களையும், சுவாமியின்பேரால் கொள்ளையடிக்க முயலும் நயவஞ்சக சிரேஷ்டர்களின் அடாத செய்கைகளையும் கவனித்தீர்களன்றோ? ஆயினும், சர்வ வல்லமையுள்ள கடவுளின் மீதாணையாக "அடாது செய்வோர் படாதுபடுவர்" என்னும் ஆன்றோர் அமுதமொழிக்கிணங்க, தெண்டனைக்குள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

மறுதினம், பாஸ்கரன் கீழ்திசையில் எப்பொழுது உதயமாவான் என ஒவ்வொருவரும் எதிர் நோக்கியிருந்தார்கள். மறுதினம் கீழ்த்திசையில் அருணனும் உதயமாகினன். வஞ்சகநாத பஞ்சநதய்யர் பிரயாணிகளைக் காவேரிக்கழைத்துச்சென்று நீராடிய பின்னர், அபிஷேகத்திற்கான திருமஞ்சனக் குடங்களுடன் நேராக ராஜ ராஜேஸ்வரர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு, பேஷ்காரின் எச்சரிக்கைப்படி, ஆலய உக்கிராண சிப்பந்தி புஷ்பமாலைகளுடன் தயாராக இருந்தான். ஆயைமும் ஒருவாறு சுத்தி செய்யப்பட்டு ஒரு சிறு விளக்குமட்டும் மினுக்கு மினுக்கென பிரகாசித்துக்கொண்டிருந்தது. பிரயாணிகள் யாவர்களும், ஆலயத்திற்குச் சென்றவுடன், உக்கிராண சிப்பந்தியால் அபிஷேக சாமான்கள் யாவும், கொர்ப்ப கிரகத்தினுள் கொண்டுபோய் வைக்கப்பட்டதும், பஞ்சாபிகேசய்யரால் அனுமதித்தனுப்பப்பட்ட தேசிகனுதம்பிள்ளை, தானே விக்கிரஹத்திற்கு அபிஷேகம்செய்து வஸ்திராபரணங்களாலும், புஷ்பமாலைகளாலும் அலங்கரித்து, கற்பூரார்த்தி செய்ய ஆரம்பித்தார். அதே சமயம், இடிந்துகிடந்த ஒரு மொட்டைச் சுவரின் மறைவில் மறைந்திருந்த, லெஞ்சப்பிரிய கஞ்சமலைப் பிள்ளை, 2 தாணுக்காரர்களுடன். அங்கு பிரவேசித்தார். அதுகண்ட பேஷ்கார் பஞ்சநதய்யரின் பாடு விலவிலத்து விட்டது. செய்வதின்னதெனத் தோன்றாது விழித்தார். கஞ்சமலைப்பிள்ளையை அணுகி, எதற்காக வந்தீர்கள்? எனவும், அஞ்சா நெஞ்சுடைய அவர் பேஷ்காராகிய வஞ்சகநாத பஞ்சாபிகேசய்யரை நோக்கி,

கஞ்ச. எதற்காக என்று கேட்கிறார். "ஆகமசாஸ்திரத்திற்கு விரோதமாய், நீர் லெஞ்சம் வாங்கிக் கொண்டு, பிராமணரல்லாதவரை விக்கிரகத்திற்கு அபிஷேக ஆராதனை செய்ய அனுமதி கொடுத்து, சகல காரியங்களையும் நடப்பிவித்ததற்காக உம்மையும், உமது வஞ்சக வலையில் சிக்கிய பிரயாணியையும் கைதிசெய்வதற்காகவே வந்திருக்கிறோம்" எனக்கூறி முடித்து தாணுக்காரர்களை நோக்கி "என் தாமதம், உங்கள் காரியத்தைப் பாருங்கள்." என்றார்கள்.

உடனே தாணுக்காரர்கள். பிரயாணிகளின் தலைவரும், அபிஷேக ஆராதனைகள் செய்தவருமாகிய, தேசிகனுதம் பிள்ளையையும் கைதுசெய்து, அவ்வூர் கிராமாதிகாரியும், அற்புத விகடனுமாகிய என்னிடம் கொண்டு வந்து ஒப்பிவித்து,

பஞ்சாபிகேசய்யர் மநுநீதி சுலோகப்படி, பிராமணர்களிலும் பாத்தியதையற்ற, சிங்கப்பூர் வாசியாகிய தேசிகனுதம் பிள்ளையைக்கொண்டு ராஜராஜேஸ்வரருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்ததால், அவ்விருவர்களையும் தெண்டித்து, அவ்வாலயத்திற்கு இனிச் செய்யவேண்டிய சம்ரோக்ஷணைச் செலவிற்காக, ஆலயத்திற்கு ரூ 1000 வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்றும், ஆலயத் தலைமை குமாஸ்தாவாகிய லெஞ்சப்பிரிய கஞ்சமலைப்பிள்ளை பிராது கொடுத்தார்.

அதே சமயம், மற்றிரு தாணுக்காரர்கள், கொட்டாரத்தில் நெல் திருடச் சென்ற கஞ்சமலைப் பிள்ளையின் ஆளை திருட்டு நெல் மூட்டைகளுடன் கிராமதிகாரியாகிய என் முன் ஆஜர் செய்தார்கள்.

அதுகண்ட கஞ்சமலைப் பிள்ளை, திக்பிரமைகொண்டவராய், மெதுவாக அக்குப்பலை விட்டு நழுவிவிடக் கருதி வெளியே செல்ல எத்தனிப்பதைக் கண்ணுற்ற நான், செல்லவிடாது தடுத்து அவரையும் ஒருபக்கத்தில் உட்காரச் சொல்லி வாய் மூடுமுன் முன்னாள் இரவு, அப்பம், வடை, கொடாததிற்காக சஸ்பண்டு செய்யப்பட்ட சுப்பையர் தன்னை, ஆலய தர்மகர்த்தா சுயநலம் சோணசலம் செட்டியார் அநீதமாக வேலையினின்று நீக்கிவிட்டதுடன் அபராதமும் விதித்திருப்பதாக மனுச் செய்துகொண்டார். அவரையும் அமரச் செய்து, ஒரு தாணுக்காரனை அனுப்பி தர்மகர்த்தா சுயநலம் சோணசலம் செட்டியாரை அழைத்து வரச் செய்தேன். இதற்குள் இவ்வளவு விஷயங்களும் ஊர் முற்றிலும் பரவிவிட்டபடியால் கிராமாதிகாரியாகிய எனது இல்லத்தின் வெளியே திரளான ஜனங்கள் கும்பல் கூடிவிட்டார்கள். உடனே அற்புத விகடனாகிய நான் முதலாவதாக, விக்கிரஹ ஆராதனைச்சேசை எடுத்துக்கொண்டு தேசிகனுதம்பிள்ளையைக் கூண்டில் நிறுத்தி,

அற்பு. உமது பெயரென்ன? எந்த ஊர்? எதற்காக இவ்வூர் வந்தீர்கள்.

தேசி. எனது ஜென்ம தேசம் சிங்கப்பூர். எனது நாமம் தேசிகனுதம் பிள்ளை. ஸ்தலயாத்திரையாக நேற்று மாலைதான் இவ்வூர் வந்தேன்.

அற்பு. சரி. இவ்வூர் ராஜராஜேஸ்வரருக்கு இன்று நீரே விக்கிரஹ பூஜை செய்ததுண்டா?

தேசி. ஆம் அபிஷேக ஆராதனைகள் செய்தேன்.

அற்பு. இதற்கு முன் அவ்வாலயத்தில் இம்மாதிரி நீர் பூஜை செய்ததுண்டா?

தேசி. கிடையாது.

அற்பு. நீரே பூஜை செய்யலாமென உமக்கு யாராவது கூறினர்களா?

தேசிக. நான் ஜம்புநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்றேன். அங்கு நான் செய்ய முடியாதென்றும் குறிப்பிட்ட ஒரு வகுப்பாரிலும் ஒரு சாராரே, அபிஷேகார்ச்சனைகள் செய்யலாமென்றும் தெரிவித்தார். நாமே நேரில் கடவுளை பூஜிக்க அனுமதிக்கப்படாத இடத்தில் நான் தெரிசனம் செய்ய இஷ்டப்படவில்லை யென்று சொன்னேன். உடனே பஞ்சநதய்யர், ராஜராஜேஸ்வரர் ஆலயத்தில் வெண்டுமானல் நானே பூஜைசெய்யலாமெனத் தெரிவித்தார். அதன்படி நான் சாமான்கள் தயாரிக்கச்செய்து அபிஷேகம் முதலானதுகளைச்செய்து முடித்தேன்.

அற்பு. அப்படிச்செய்ததானது ஆகமத்திற்கு விரோதமாயும் மனுநீதி சாஸ்திரத்திற்கு விரோதமாய் நீர் அக்கிரமம் செய்திருப்பது குற்றமென ஒப்புக்கொள்கிறீரா?

தேசிக. எப்படிக்குற்றமாகும். நான் அநீதியான செய்கைகள் ஒன்றும் செய்துவிட வில்லை. அதற்கும் ஆகமப்படி, பெரியோர்களால் அனுமதிக்கப்பட்டிருக்கிற நீதியையும் கூறுகிறேன்.

தசரத தனயரான, ஸ்ரீ ராமபிரான் தண்டகாருண்ய மெல்லாம்திரிந்து மகுடம் புனைந்து மனுநீதி தவராது ராஜ்ய

பரிபாலனம் செய்துவந்தநாளிலோர்நாள் ஒரு அந்தணர் அதிபால்யத்தில் மரணமான தனது ஒரே புதல்வனை ராஜ சமுகத்தில் கிடத்தி, தனது புதல்வன் அதிபால்யத்தில் மரணமானதற்குக் காரணம் ராஜ நீதியில் ஏதோ அநீதியிருப்பதாயும், நீதிநிறைந்த அரசனெல்லையில் பால்ய மரணம் நிகழாதெனவும் ஆதலால் தனது மரணமடைந்த குழந்தைக்கு உயிர் வந்தாலொழியத் தான் உயிர்வாழ முடியாதென்றும், கண்ணுங்கண்ணீருமாய், பிரலாபிக்கலானார். செவி ஏற்ற ராமபிரான் வெட்கி மந்திரி பிரதானிகளை வரவழைத்து, கொலுமுகத்தில்வைத்து அதற்கு யாது செய்யலாமென ஆலோசித்ததில் ஒன்றும் புலனாகாது திகைத்து வருந்தியிருக்கும் சமயம், மகரிஷிகளாகிய, நாரதர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலிய பெரியோர்கள் விஜயமாகவும் அவர்கள் கொலுமுகத்தில் சோடச உபசாரங்களுடன் வரவழைக்கப்பட்டு, உயர்ந்த ஆசனங்களில் அமர்த்தப் பட்டார்கள். பின்னர், இவ்விஷயாலோசனையை அவர்கள்பாற் கூறவும் அப்பெருமான்கள் திருவாய் மலர்ந்தருளியவைகளாவது,

"விந்தியமலைச்சாரலில், ஒரு சூத்திரன் தலை கீழாகவும் கால் மேலாகவும்நின்று கடுமையாகத்தவம் செய்கிறான். சூத்திரர்கள் கலியுகம் ஒன்றில்தான், யாகம் எக்யம் தவம், விக்கிர ஆராதனை முதலியவைகள் செய்யலாம். இந்த யுகதர்மப்படி சூத்திரன் தவநிலைபூண்டால் அவனைக் கொலைசெய்துவிடவேண்டியது ராஜனுடைய கடமை. ஆதலால் அச்சூத்திரன் கொல்லப்பட்டால் இவ்வந்தணரின் குழந்தை உயிர் பெற்றெழுவான் எனக்கூறி முடித்தான். அதன்படியே ஸ்ரீராமரும் விந்தியமலைக்குச் சென்று, அச் சூத்திரனைக்

கொன்றுவிட்டதின் பின்னர் அந்தணரின் குழந்தையும் உயிர்பெற்றதெதென வால்மீக ராமாயாணம் உத்திரகாண்டத்தில் கூறப்பட்டடிருக்கிறது. ஆதலால் மனுநீதி சாஸ்திரம் அமுலுக்கு வருவதாயின், வேதமென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ராமாயணத்தில் கூறியிருக்கிறபடி இக்கலியுகத்தில் விக்கிரக ஆராதனை செய்தது குற்றமாகாதெனவே கருதுகிறேன்.

அற்பு. உமது பதில் மெச்சத் தகுந்ததும் ஒப்பத்தகுந்ததுமாயிருக்கிறபடியால் உம்மை விடுவிக்கிறேன்.

நீர் பேஷ்கார் பஞ்சநதய்யரிடம் சாமான்களுக்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தீர்?

தேசி. ரூ 350 கொடுத்தேன்.

அற்பு. சரி, ஒரு பக்கமாய் அமரும் என்று கூறி பேஷ்காரரான வஞ்சநாதபஞ்சநதய்யர் கூண்டினுள் நிறுத்தப்பட்டார்.

அற்பு. உமது பெயரென்ன?

பேஷ். எனது பெயர் பஞ்சநதய்யர்.

அற்பு. நீர் இவ்வாலய பேஷ்காரரா?

பேஷ். ஆம்.

அற்பு. தேசிகநாதம் பிள்ளையிடம் ரூ 350 வாங்கியதுண்டா?

பேஷ். ஆம்.

அற்பு. 25 ரூபாய் கொடுத்து கோவில் சாமான்கள் கொண்டு வந்ததுண்டா?

பேஷ். ஆம்.

அற்பு. நீர் கோவில் பொருள் களவாடியதும், பிரயாணியை சுவாமியின் பெயரால் வஞ்சித்ததுமாகிய குற்றங்களை ஒப்புக்கொள்கிறீரா?

பேஷ. நான் செய்ததெல்லாம் குற்றம்தான். இம்முறை மன்னித்துவிட்டால் இனி இம்மாதிரியான காரியங்களில் பிரவேசிக்கமாட்டேன்.

அற்பு. உமது குற்றங்கள் மன்னிக்கத்தகுந்ததல்ல. ஆனல், கர்ண கடூரமானதாகத் தெண்டிக்கப்போவதில்லை. உமக்கு ரூ 200 அபராதமும் 3 மாசம் கடுங்காவல் தெண்டனையும் விதித்திருக்கிறேன். அபராதம் செலுத்தாத விஷயத்தில் 1 மீ அதிமாக கடுங்காவல் தெண்டனை ; அநுபவிக்கவேண்டும் என்றவுடன் அபராதம் கொடுக்காமல் அதிக தெண்டனை அநுபவிக்கச் சம்மதித்ததால், விலங்கிடப்பட்டு சிறைக்கூடத்திற்கழைத்தேகப்பட்டார். பின்னர் உக்கிராண அறைக் காவலனுக்கு ரூ 50 அபராதம் விதிக்கப்பட்டது. அதே சமயம் ஆலய தர்மகர்த்தா சுயநலம் சோணாசலம் செட்டியாரும் வந்துசேர்ந்தார். அவர் செல்வந்தரானபடியால் வந்தனத்துடன் வரவேற்கப்பட்டு ஓராசனத்தில் அமர்ந்தார். பின்னர் தாணுக்காரர்கள், நெல் களவாடியவனை ஆஜர்செய்தார்கள். அவன் தலைமை குமாஸ்தா லஞ்சப்பிரிய கஞ்சமலைப் பிள்ளை சொல்லியபடி களவாடியதாகக் கூறப்பட்டதால், கஞ்சமலைப் பிள்ளை மறுத்தும், அற்புதவிகடனும் கிராமாதிகாரியுமான நான் உண்மையை உணர்ந்தவனானபடியால், கஞ்சமலைப் பிள்ளைக்கு 5 வருஷம் சிறைவாசமும், உடைந்தையாக

களவாடியவனுக்கு 1 மாதம் சிறைவாசத் தெண்டனையும் விதிக்கப்பட்ட பின்னர் குற்றவாளிகளைச் சிறைச்சாலைக்கு அழைத்தேகினார்கள். பின்னர் சுப்பைய்யர் மனுவை விசாரிக்க மானேஜர் செட்டியாரைக் கூண்டினுள் நிறுத்தி,

அற்பு தாங்கள் சுப்பைய்யர் என்பவரை வேலையினின்று நீக்கி 5 ரூபாய் அபராதமும் விதித்தீர்களா?

செட்டி. ஆம்.

அற்பு. எதற்காக விலக்கினீர்கள்? அபருதம் விதித்தீர்கள்?

செட்டி. அவர் 1 மீ காலமாகவே காலாகாலத்தில் வேலைகளைப் பார்ப்பதில்லை, அடிக்கடி வெற்றிலை போட்டுக் கொண்டு, ஆலயத்தினுள் எச்சலை உமிழுகிறார். ஆதலால் அவரை அபருதம் விதித்து மறு உத்திரவு வரையில் வேலையினின்றும் நீக்கப் பட்டிருப் பதாக உத்தரவிட்டேன்.

அற்பு. ஆனல் அவரை வேறு எக்காரணம் கொண்டும் நீக்க வில்லையே?

செட்டி. இல்லை.

அற்பு. முன்னளிரவு தாங்கள் சொக்காப்பம் வடை முதலானது கொண்டுவரும்படி உத்திரவிட்டீர்களா?

செட்டி ஆம்.

அற்பு. அவர் கொண்டு வந்தாரா?

செட்டி. இல்லை.

அற்பு. ஏன் எனக் கேட்டீர்களா? என்ன பதில் சொன்னார்?

செட்டி. தாங்கள் வேண்டுமெனக் கேட்டதாகவும் விற்றுமுதலாகி விட்டதெனவும் தெரிவித்தார்.

அற்பு. அதற்காகத்தானே இவ்வுத்திரவு?

செட்டி. அல்ல.

அற்பு. சரி. அதிருக்கட்டும், தாங்கள் ஆலயப் பிரசாதங்கள் வேண்டுமானால் கிரயம் கொடுத்து வாங்குவதா? தேசாந்திரிகள் கணக்கில் சிலவெழுதிவிடுவதா?

செட்டி. நாங்கள் பிரசாதங்கள் வாங்கினால் அப்போதைக்கப்போது எங்கள் ஏஜண்டுமூலம் தொகையை அனுப்பிவிடுவது வழக்கம்.

அற்பு. உங்களிடமும் பணம் பெற்றுக்கொண்டு பிரசாதங்களுக்கு தர்மச் சிலவும் இதுவரையில் எழுதி வந்திருக்கிறார்கள். தங்களுக்கிருக்கக்கூடிய செல்வ நிலைக்கும் கௌரவத்திற்கும் இம்மாதிரியாகத் தர்மபரிபாலனம் செய்தால் உங்கள் தலைக்கே கல் வந்துவிடும். கொடியோர்கள் இருவர்களையும் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டேன். சுப்பய்யரை வேலைக்கு வைத்துக்கொள்ளுங்கள். இனியாவது தாங்கள் சரிவரக்கவனித்து ஒழுங்கானவர்களை அதிகாரவர்க்கத்தினர்களாக நியமிக்காத விஷயத்தில் தங்கள் பாடு ஆபத்தாகும். எனக்கூறி முடித்தேன். செட்டியாரும் பேராச்சரியமுற்றவராய் இல்லமேகினார். தேசிகனுதாகிய பிரயாணியும் பெண்டு பிள்ளைகளுடன் பிரயாணமானார்.

கோவில்பட்டி, சரஸ்வதி பிரஸில் அச்சிட்டது. 1928.

-600 008.

பரிமள ஆங்கிலம்.

1500, English Idiomatic Sentences with Tamil equivalents, Specimen Letters, Petitions, Complaints Etc., etc.

இம்மாதிரிப் புத்தகம் இதற்குமுன் வெளியாகவில்லை என்பது திண்ணம். இப்புத்தகம் மாணவர்களுக்கும் ஆங்கில பாஷையைக் கொஞ்சங் கற்றவர்களுக்கும் மிகுந்த பிரயோஜனமுள்ளது.

1500 ஆங்கிலத் தொடர்மொழிகளாலுண்டான வாக்கியங்களும் அவற்றின் தமிழ் அர்த்தங்களும், மாதிரிக் கடிதங்கள், மனுக்கள் பிராதுகளும் அடங்கியவை. பின்பு தமிழ் இங்கிலீஷ் அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கடைசியில் தொடர்மொழிகளை அட்சர கிரமப்படி எழுதி எப்பக்கத்தில் அவைகள் அச்சிடப்பட்டிருக்கிறதோ அப்பக்கங்களின் இலக்கங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

100 பக்கங்கள்கொண்ட சுத்தமான பதிப்பு.

விலை ரூ 1 8 0 தபால் சார்ஜ் வேறு.

பெண்புத்திப் பிரகாசிகை.

ஆடவரும் பெண்டிரும் அவசியம் படிக்கவேண்டிய அருமையான நூல்.

விலை அணா 1.

தாரு தாமோதரன்.

[ஓர் இனிய தமிழ் நாவல்]

விலை அணா 2.

சரஸ்வதி அன்கோ,

கோவில்பட்டி, S. I. R.